International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)
Volume: 02 Issue: 04 October to December 2020 www.irjtsjournal.org

# சங்க இலக்கியங்களில் மகாபாரதக் கதைகள்

# Mahabharata Stories in Sangam Literatures

ஷா. முஹம்மது அஸ்ரின்,

*முதுகலைத் தமிழ் இரண்டாம் ஆண்டு (UGC-JRF),*
*முதுகலைத் தமிழாய்வுத்துறை,*
ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி), திருச்சி – 20.

**முன்னுரை:**

சங்க கால தமிழ் மக்களின் அகம் மற்றும் புறம் சார்ந்த வாழ்க்கை முறைகளை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. இவ்விலக்கியங்களில் தமிழரின் உணவு முறை, வணிகம், காதல், வீரம், கொடை, நம்பிக்கை, வழிபாடு ஆகியவற்றை புலவர்கள் பதிவுசெய்துள்ளனர். பண்டைய காலத்தில் நிகழ்ந்ததாக நம்பப்படும் இராமாயணம் மற்றும் மகாபாரதம் குறித்த செய்திகள் சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படுகின்றன. இவற்றுள் புறநானூறு, கலித்தொகை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை ஆகிய சங்க இலக்கியப் பாடல்களில் காணப்படும் மகாபாரதக் கதைகள் மட்டும் இக்கட்டுரையின் ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**மகாபாரதப் போர் பற்றிய குறிப்பு:**

தருமன் தலைமையிலான பாண்டவர்களுக்கும், துரியோதனன் தலைமையிலான கௌரவர்களுக்கும் பதினெட்டு நாட்கள் நடைபெற்ற போர் '**மகாபாரதப் போர்**' ஆகும். இப்போரில் பஞ்ச பாண்டவர்களான தருமன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் ஆகியோர் பாண்டவர்கள் அணியாகவும், துரியோதனன் மற்றும் அவனுடன் பிறந்த தொன்னூற்று ஒன்பது உடன்பிறப்புகள் கௌரவர்கள் அணியாகவும் விளங்கினர். மகாபாரதப் போரின் இறுதியில் தருமமே வெல்லும் என்பதற்கு சான்றாக எண்ணிக்கையில் குறைந்து விளங்கிய பஞ்ச பாண்டவர்கள் வெற்றி பெற்றனர். இவ்வரலாற்று செய்தியை தொண்டைமானைப்

புகழ்ந்து உருத்திரங் கண்ணனாரால் பாடப்பட்ட பெரும்பாணாற்றுப்படையில் காண முடிகிறது.

**"ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்**
**பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்**
**ஆராச் செருவின் ஐவர் போல"**

**(பெரும்பாணாற்றுப்படை. 415-417)**

என்னும் பாடல் அடிகளில் நூறு நபர்களைக் கொண்ட கௌரவர்களை (ஈரைம்பதின்மர்) ஐந்து நபர்களைக் கொண்ட பாண்டவர்கள் (ஐவர்) போர் செய்து வெற்றி பெற்றதாகக் குறிப்பிடுகிறார்.

**"புரிபுமேற் சென்ற நூற்றுவர் மடங்க**
**வரிபுனை வல்வி லைவ ரட்ட**
**பொருகளப் போலுந் தொழூஉ"**

**(கலித்தொகை, பா.104:57-59)**

என்ற நல்லுருத்திரனின் பாடலில் பாண்டவர்களுக்கும், கௌரவர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்களக் காட்சி குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடலில் நூறு நபர்களைக் கொண்ட கௌரவர்கள் '**நூற்றுவர்**' எனக் குறிப்பிடப்பட்டுள்ளனர். இந்த நூறு நபர்களுக்குத் தலைவனாகத் துரியோதனன் விளங்கியதை "**நூற்றுவர் தலைவன்**" (**கலித்தொகை, பா**.52:2) எனக் கபிலர் குறிப்பிட்டுள்ளார்.

கௌரவர்களுடன் பாண்டவர்கள் போர் புரிய தருமனுக்கும், துரியோதனனுக்கும் இடையேயான சூதாட்டப் போட்டியில் சகுனி செய்த சதிச்செயல்கள் காரணமாக அமைந்தன. சூதாட்டப் போட்டியில் பொருளையும், நாட்டையும், மனைவியான திரௌபதியையும் பந்தயாமாக வைத்து தர்மன் இழந்தான். வீட்டில் இருந்த திரௌபதியை அழைத்து வருமாறு துச்சாதனனிடம் துரியோதனன் கூறினான். தன்னுடன் வர மறுத்த திரௌபதியைக் கூந்தலைப் பிடித்து துச்சாதனன் இழுத்து வந்தான். இந்நிகழ்வு கற்றோரால் ஏத்தப்படும் கலித்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**"அஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியான்"**

**(கலித்தொகை, பா.101:18)**

மகாபாரதப் போர்க்களத்தில் இரு அணிகளுக்கும் சேர மன்னன் ஒருவன் சோறு வழங்கிய செய்தியை முரஞ்சியூர் முடிநாகனாரின் பாடலில் காண முடிகிறது. சேர மன்னர்களில் சேரலாதன், இரும்பொறை என்ற இரு பிரிவுகள் உண்டு. மூத்த சேர மன்னர்கள் '**சேரலாதன்**' பிரிவினர் என்றும், அவர்களை தொடர்ந்து ஆட்சி செய்த சேர

மன்னர்கள் '**இரும்பொறை**' பிரிவினர் என்றும் அழைக்கப்பட்டனர். இப்பிரிவுகளில் மகாபாரதப் போரில் சோறு வழங்கிய சேரலாத மன்னன் "**சேரமான் பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்**" எனப் பெயர் பெற்றான். இதனை,

**"அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ**
**நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை**
**ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்**
**பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்"**

**(புறநானூறு, பா.2:13-16)**

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் உறுதிப்படுத்துகிறது. இப்பாடலில் கௌரவ அணியினரை '**ஈரைம்பதின்மர்**' என்றும், பாண்டவ அணியினரை '**ஐவர்**' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

**பாண்டவர்கள் பற்றிய குறிப்புகள்:**

பஞ்ச பாண்டவர்களான தருமன் (யுதிஷ்டிரன்) யமன் மூலமாகவும், பீமன் வாயு பகவான் மூலமாகவும், அர்ச்சுனன் இந்திரன் மூலமாகவும் குந்திக்குப் பிறந்ததாகவும், இரட்டையர்களான நகுலனும், சகாதேவனும் அஸ்வினி தேவர்கள் மூலமாக மாத்ரிக்குப் பிறந்ததாகவும் மகாபாரதக் கதையில் கூறப்பட்டுள்ளது. நோயைத் தீர்ப்பதற்காக நெருப்புக் கடவுள் இந்திரனுடைய '**காண்டவம்**' என்ற காட்டை உண்ண முயன்றான். நெருப்புக் கடவுளின் முயற்சியை இந்திரன் பலவாறு தடுத்தான். இதனால், அர்ச்சுனனிடன் நெருப்புக் கடவுள் உதவி கேட்டதாகவும், இந்திரனை எதிர்த்து அம்புகள் எய்து காட்டை உண்ண நெருப்புக் கடவுளுக்கு அர்ச்சுனன் உதவியதாகவும் மகாபாரதக் கதையில் கூறப்பட்டுள்ளது. இக்கதையில் கூறப்பட்ட செய்திகளை நல்லூர் நத்தந்தனாரால் பாடப்பட்ட சிறுபாணாற்றுப்படையில் காண முடிகிறது.

**"காவெரி யூட்டிய கவர்களைத் தூணிப்**
**பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்"**

**(சிறுபாணாற்றுப்படை. 238-239)**

மேலும், அர்ச்சுனனின் சகோதரனான பீமனைக் குறித்தும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். "**பனிவரை மார்பன் பயந்த**" (**சிறுபாணாற்றுப்படை. 240**) என்ற பாடல் அடியில் பீமனை '**பனிவரை மார்பன்**' என்ற பெயரால் குறிப்பிடுகிறார். பனிப்பகுதிகளைக் கொண்ட வலிமையான சிகரங்களைப் போல, போருக்கு அஞ்சாத வலிமையான மார்பினைக் கொண்டவன் என்ற பொருளில் குறிப்பிட்டுள்ளார்.

**அரக்கு மாளிகையில் நெருப்பு:**

சிறுவயதில் இருந்து பாண்டவர்களை பகைவர்களாகக் கருதிய துரியோதனன், அவர்களை அழிக்க திட்டமிட்டான். தனது அமைச்சராகிய புரோசனனுடன் ஆலோசித்து பாண்டவர்களை அழிக்கும் வழியை கண்டுபிடித்தான். அவர்கள் திட்டப்படி வாரணாவதம் என்ற ஊரில் அரக்கால் கட்டப்பட்ட மாளிகையில் பாண்டவர்களைத் தங்கும்படிச் செய்து, அம்மாளிகைக்கு நெருப்பிட்டுக் கொல்ல முடிவுசெய்தனர். (அரக்குப் பயன்படுத்தி செய்யப்பட்ட பொருளில் விரைவாகவும், எளிதாகவும் நெருப்பு பற்றிக்கொள்ளும்). இந்நிகழ்வு பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

**“வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற**
**முகத்தவன் மக்களுள் முதியவன் புணர்ப்பினால்**
**ஐவரென் றுலகேத்தும் அரசர்கள் அகத்தராக்**
**கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தரங்கு”**

**(கலித்தொகை, பா.**25:1-4)

அரக்கு மாளிகையை கட்டிய தச்சர்களுள் ஒருவன் விதுரனுடைய நண்பன். துரியோதனனின் சூழ்ச்சிகளை அறிந்த விதுரன் தனது நண்பனிடம் அரக்கு மாளிகைக்குள் சுரங்கப் பாதை ஒன்றை அமைக்குமாறு கூறியிருந்தார். இதனை வீதுரனின் நண்பன் (தச்சர்) பீமனைக் கண்டு கூறினார். இதனால் அரக்கு மாளிகையில் தீயினை வைத்துவிட்டுச் சுரங்கப் பாதை வழியாக சகோதரர்களை அழைத்துக் கொண்டு பீமன் வெளியேறினான். இச்செய்தி பாலைக்கலிப் பாடலில் பெருங்கடுங்கோவால் குறிப்பிடப்பட்டுள்ளது.

**“ஒள்ளுரு வரக்கில்லை வளிமகன் உடைத்துத்தன்**
**உள்ளத்துக் கிளைக்ளோ டுயப்போகு வான்போல”**

**(கலித்தொகை, பா.**25:7-8)

என்ற பாடல் அடியில் பீமனை ‘**வளிமகன்**’ (வாயுபகவானின் மகன்) எனப் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

**துரியோதனன் மற்றும் துச்சாதனனின் முடிவு:**

தர்மனை சூழ்ச்சியால சூதாடி வென்ற கௌரவர்களைக் கொல்வதாக பீமன் உறுதிபூண்டான். அவனே திரௌபதியின் கூந்தலைப் பிடித்து இழுத்த துச்சாதனனையும், ஆடையைக் கலைந்த துரியோதனனையும் கொல்கிறான். தனது கூந்தலைப் பிடுத்திழுத்த துச்சாதனனின் இரத்தத்தைக் கொண்டு கூந்தலை

முடிவதாகத் திரௌபதி உறுதிபூண்டாள். மகாபாரதப் போரில் துச்சாதனனின் நெஞ்சைப் பிளந்து பீமன் கொன்றான்.

**“அஞ்சீ ரசையியல் கூந்தற்கை நீட்டியான்**
**நெஞ்சம் பிளந்திட்டு நேரார் நடுவண்தன்**
**வஞ்சினம் வாய்த்தானும் போன்ம்”**

**(கலித்தொகை, பா.101:18-20)**

எனக் கூந்தற்கை நீட்டியானின் (துச்சாதனன்) மார்பு பீமனால் பிளக்கப்பட்டதை முல்லைக் கலியில் நல்லுருத்திரன் குறிப்பிட்டுள்ளார்.

பாரதப் போரின் பதினெட்டாம் நாளில் உடன்பிறப்புகளையும் உறவினர்களையும் இழந்து தனியொருவனாகத் துரியோதனன் களத்தில் நின்றான். கௌரவர்களை அழிப்பேன் என சபதம் எடுத்த பீமனுக்கும் துரியோதனனுக்கும் இடையே கதாயுதச் சண்டை நடைபெற்றது. இதில் பீமனால் தொடைப் பகுதி பிளக்கப்பட்ட துரியோதனன் உயிருக்கு போராடும் நிலையில் தரையில் வீழ்ந்தான்.

**“மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்**
**குறங்கறுத் திடுவான்போற் கூர்நுதி மடுத்ததன்”**

**(கலித்தொகை, பா.52:2-3)**

என்ற பாடலில் பீமனால் துன்பப்பட்ட நூற்றுவர் தலைவனான (துரியோதனன்) போல இரவுக்குறியால் தலைவி துன்பம் அடைகிறாள் எனக் கபிலர் பாடியுள்ளார்.

**முடிவுரை:**

சங்க இலக்கியப் பாடல்களில் மகாபாரதக் கதைகள் புலவர்களால் குறிப்பிடப்பட்டாலும், கதை மாந்தர்களின் பெயர்கள் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. பாண்டவர்களை ‘**ஐவர்**’ என்றும், கௌரவர்களை ‘**ஈரைம் பதின்மர்**’, ‘**நூற்றுவர்**’ என்றும், துரியோதனனை ‘**நூற்றுவர் தலைவன்**’ என்றும், துச்சாதனனை ‘**கூந்தற்கை நீட்டியான்**’ என்றும், பீமனை ‘**வளிமகன்**’, ‘**பனிவரை மார்பன்**’ என்றும் சங்கப் புலவர்கள் கதை மாந்தர்களின் பெயரை வெளிப்படையாகக் கூறாமல் குறிப்பால் பதிவு செய்துள்ளனர். மேலும், பெரும்பாண்மையான தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய ‘**பாரதம் பாடிய பெருந்தேவனார்**’ என்ற புலவரின் பெயரால் அக்காலத்தில் பாரதக் கதை வழக்கத்தில் இருந்தது உறுதியாகிறது.

## துணைநின்ற நூல்கள்:

[1] சாமிநாதையர். உ.வே (ப.ஆ), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும், தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர், 1986.

[2] சீனிவாசன். ரா. (உ.ஆ), மாபாரதம், அணியகம் வெளியீடு, சென்னை, 1992.

[3] பசுபதி. ம. வே. (ப.ஆ), செம்மொழித்தமிழ் இலக்கண இலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், 2010.

[4] பார்த்தசாரதி. நா, மகாபாரதம் அறத்தின் குரல், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, 1964.

[5] புலியூர்க் கேசிகன் (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை, 2010.

[6] புலியூர்க் கேசிகன் (உ.ஆ) , கலித்தொகை மூலமும் உரையும், கௌரா பதிப்பகம், சென்னை, 2001.